**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(31.12.2022 முதல் 04.01.2023 )**

**அறிக்கைஎண் 104/2022** **தேதி.30.12.2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 07°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 26.12.22 முதல் 29.12.22 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 41 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (27.12.2022 முதல் 29.12.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 04.01..2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 27/12 | 28/12 | 29/12 | தேதி | நாள்-1 31/12 | நாள்-2 01/01 | நாள்-3 02/01 | நாள்-4 03/01 | நாள்-5 04/01 |
| 1.7 | 1.7 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 28 | 28 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 31 | 32 | 32 | 32 |
| 22 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 21 | 21 | 22 | 22 | 22 |
| 6 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 0 | 0 | 0 | 2 | 2 |
| 87 | 93 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 75 | 51 | 41 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 15 | 12 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 6 | 6 | 6 | 8 |
| 20 | 90 | 90 | காற்றுவீசும் திசை | 70 | 50 | 90 | 90 | 70 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (31.12.2022 முதல் 04.01.2023)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலையை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின்

திசையிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 31-12-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 01-01-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 02-01-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 03-01-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 31-12-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிக குளிர்ந்த இரவுநேர வெப்பநிலையுடன் வறண்ட வானிலையுடன் காற்றின் வேகம் 4 - 8 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது.<br>பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை சிறிது உயர்ந்து வருகிறது.<br>மண் ஈரத்தினைப்பொறுத்து நீர் பாசனம் செய்யவேண்டும். |
| நெல் | அறுவடை | கடந்த வார மற்றும் தற்போதைய வானிலை காரணமாக கதிர் பருக்கும் பருவத்திலுள்ள பின் சம்பா நெல்லுக்கு நீர்ப்பாசனம் செய்யவும். |
| மக்காச்சோளம் | வளர் மற்றும் பூக்கும் பருவம் | ஈரப்பதமான குளிர்ந்த வானிலையால் மக்காச்சோளத்தில் அடி சாம்பல் நோய் தென்பட்டால் பாதிக்கபட்ட செடியினை அகற்றவும். ஏனெனில் மருந்துகள் கொண்டு இவற்றை கட்டுப்படுத்த தற்போது இயலாது.<br>தற்போது நிலவும் வானிலையில் 45 நாள் வயதுடைய இறவை மக்காச்சோளப்பயிருக்கு ஒரு எக்டருக்கு 74 கிலோகிராம் யூரியா கொண்டு உரமிடவும். |
| கொண்டைக்கடலை | வளர் மற்றும் பூக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் கொண்டைக்கடலையில் வாடல் நோய் வரவாய்ப்புள்ளது. நோய் தாக்கியிருக்கும் இடங்களில் ஒரு சத கார்பன்டெசிம் கரைசலை தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| கரும்பு | நடவு | வறண்ட காலநிலை எதிர்பார்க்கப்படுவதால், முன் பருவ கரும்பு நடவிற்கு நிலம் தயார் செய்யவும். நடவிற்கு முன்பு அடியுரமாக ஒரு எக்டருக்கு 25 டன் தொழு உரம் அல்லது 37.5 டன் கரும்பு ஆலைக்கழிவு இட வேண்டும். இதைத் தொடர்ந்து நிலத்தினை வட்டக்கலப்பை மற்றும் கொத்து, கலப்பை கொண்டு உழுது பின்பு லேசர் கருவி கொண்டு சமன் செய்யவும். கரும்பு கரணைகளை நடுவதற்கு முன்பு 50 கிராம் கார்பன்டசிம் (ஊயசநெனேயணனைஅ) ரூ 200 மில்லி மாலத்தியான் (Malathion) + 1 கிலோ யூரியா கலந்த 100 லிட்டர் தண்ணீரில் 15 நிமிடம் ஊரவைக்கவும். |

| | | |
|---|---|---|
| [illegible] | | [illegible] நீர்பாசனம் செய்யவும். |

| | | |
|---|---|---|
| திராட்சை | | நடப்பு வானிலைக்கேற்ப கோடைக்கால திராட்சை அறுவடைக்கு தற்போது கவாத்து செய்ய வேண்டும்.<br>தற்போதைய வானிலையில் திராட்சையில் சாம்பல் நோய் மற்றும் அடிசாம்பல் நோய் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 0.3 சத நனையும் கந்தகம் மற்றும் அடிசாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவையை தெளிக்கவும். |
| மஞ்சள் | | வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் கிழங்கு பிடிக்கும் பருவத்தில் உள்ள மஞ்சளில் போதிய மண் ஈரம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.<br>வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முன் பருவம் நடவு செய்த மஞ்சள் கிழங்கினை அறுவடை செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும். |
| மரவள்ளி | | வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் கிழங்கு உருவாகும் பருவத்தில் உள்ள மரவள்ளிக்கு குறிப்பிட்ட இடைவெளியில் நீர்பாசனம் கொடுப்பது கிழங்கு உருவாவதை எளிதாக்கும்.<br>அதிக ஈரப்பதமும் மற்றும் மிதமான சீதோசனமும் தற்போது காணப்படுவதால், இறவையில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளியில் செர்கோஸ்போரா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மாங்கோசெப் மருந்தை கலந்து 15 நாள் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும். |
| தென்னை | | தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்கு சரியான காலம். எனவே மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம், சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ மற்றும் மியூரேட் பொட்டாஷ் 1 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2 கிலோ, நுண்ணூட்டக்கலவை 500 கிராம் மற்றும் மக்கிய தொழு உரம் 50 கிலோ இடவேண்டும்.<br>காய்க்கும் தென்னை மரங்களுக்கு த.வே.ப.க தென்னை டானிக்கை 200 மிலியினை வேர் மூலமாக ஆறு மாத இடைவெளியில் கொடுக்கவும். |
| கால்நடைகள் | | கால்நடை மற்றும் கோழிகளுக்கு சுத்தமான குடிநீரை வழங்க வேண்டும். மேலும் கால்நடைகள் புதிதாக முளைத்த களை மற்றும் புற்களை மேயவிடாமல் பாதுகாக்கவும்.<br>கால்நடைகளின் தீவனப்பொருட்களில் நச்சு கலக்காமல் இருக்க நன்கு வெயிலில் உலர்த்தி உபயோகபப்படுத்தவும்.<br>தற்போது நிலவும் வானிலை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலையை சார்ந்த பகுதிகளிலுள்ள கால்நடைகளில் அடைப்பான் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனைக் காண்காணித்து அருகிலுள்ள கால்நடை மருத்துவமனையில் தடுப்பூசி போடவும். |

**குறுஞ்செய்தி**

- ஈரப்பதமான குளிர்ந்த வானிலையால் மக்காச்சோளத்தில் அடி சாம்பல் நோய் தென்பட்டால் பாதிக்கபட்ட செடியினை அகற்றவும். மருந்துகள் கொண்டு இவற்றை கட்டுப்படுத்த தற்போது இயலாது.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**